# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>
# <u>கூட்டப்பொருள்</u>

2020ஆம் ஆண்டு மே மாதம் 20 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 20.05.2020<br>. | 1) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டல பகுதிக்குட்பட்ட வார்டு எண். 34 மடத்தூர் பகுதியில் அமைந்துள்ள நேரு பூங்காவில் அபிவிருத்தி பணிக்காக ரூ. 21,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 25.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 26.02.2020 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு.S. Syed Sirajudeen<br>மதிப்பீட்டை விட 0.10 % குறைவு (ரூ. 18,18,981.90)<br>2)திரு. K. Balakrishnan<br>மதிப்பீட்டை விட 1.39 % அதிகம் (ரூ. 18,46,035.50)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.10 % குறைவான தொகை ரூ. 18,18,981.50 ( GST இல்லாமல்) கொடுத்துள்ள திரு. S. Syed Sirajudeen என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலகக் குறிப்பு :**<br>மதிப்பீட்டை விட 0.10 % குறைவாக கொடுத்த திரு. S. Syed Sirajudeen ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ2/03630/2019 | 81) அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| | 2) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல பகுதிக்குட்பட்ட இந்திரா நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தினை சுற்றி சுற்று சுவர் மற்றும் பம்பு அறை அமைக்கும் பணிக்காக ரூ. 23,75,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 25.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 26.02.2020 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு. K. Balakrishnan<br>மதிப்பீட்டை விட 0.27 % குறைவு (ரூ. 20,48,424.00)<br>2)திரு. S. Syed Sirajudeen<br>மதிப்பீட்டை விட 1.52 % அதிகம் (ரூ. 20,85,185.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.27 % குறைவான தொகை ரூ. 20,48,424.00 ( GST இல்லாமல்) கொடுத்துள்ள திரு. K. Balakrishnan என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 82) அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :**<br>மதிப்பீட்டை விட **0.27** % குறைவாக கொடுத்த திரு. K. Balakrishnan ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ2/03814/2019 | |
| | **3)** இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டல பகுதிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். பூங்காவில் சிறு சிறு செடிகள், மரங்கள், நடைபாதை அமைத்தல், குடிநீர் அமைத்தல் மற்றும் மாநகராட்சி logo Plotform அமைக்கும் பணிக்காக ரூ. **24,70,000/–** மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு **25.02.2020** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை **26.02.2020** அன்று திறக்கப்பட்டது.<br>**1)** திரு.S. Sutharson<br>மதிப்பீட்டை விட **0.75** % குறைவு **(ரூ. 18,89,427.00)**<br>**2)**திரு. S. Rambola<br>மதிப்பீட்டை விட **1.41** % அதிகம் **(ரூ. 19,01,836.00)**<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.75** % குறைவான தொகை ரூ. **18,89,427.00** ( GST இல்லாமல்) கொடுத்துள்ள திரு. S. Sutharson என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலகக் குறிப்பு :**<br>மதிப்பீட்டை விட **0.75** % குறைவாக கொடுத்த திரு. S. Sutharson ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ2/03413/2019 | **83)** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| | **4)**தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டல பகுதிக்குட்பட்ட அண்ணா நகர் **9**வது தெருவில் (டுவிபுரம் மேற்கு) அமைந்துள்ள சாலையானது வடகிழக்கு பருவமழையினால் மிகவும் சேதமடைந்து போக்கு வரத்து மற்றும் பொது மக்கள் செல்வதற்கு சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் புதிதாக தார் சாலை அமைக்க வேண்டியது அவசியமாகிறது. பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் புதிதாக தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் உயர்த்திக் கட்டுதல் ஆகிய பணியினை ரூ. **24.70** லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேகொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | **84)** அலுவலகக் குறிப்பு **1** மற்றும் **2** அனுமதிக்கப்பட்டது. |
| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (இலட்சத்தில்)** |
| **1** | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட அண்ணா நகர் **9**வது தெரு (டுவிபுரம் மேற்கு) சாலை சேதமடைந்த நிலையில் இருப்பது புதிதாக தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் உயர்த்தி கட்டும் பணி | **24.70** |
| | **மொத்தம்** | **24.70** |

<table>
<tr><td></td><td>எனவே பொதுமக்களின் வசதிக்கான மேற்படி பணியினை மதிப்பீட்டு தொகை ரூ 24.70 இலட்சத்தில் பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் மூலம் வரப்பெற்ற வளர்ச்சி கட்டண நிதியின் மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. மாநகராட்சி பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவின் வரன்முறைப்படுத்துதல் வளர்ச்சி கட்டண நிதி மூலம் ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். இ2/00890/2020</td><td></td></tr>
<tr><td></td><td>5) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட எம்.ஜி.ஆர். பூங்காவில் Pavilion Shed and Korean Grass Lawn Plantation & Comman Toilet அமைக்கும் பணிக்காக ரூ. 28,70,000/- மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 25.02.2020 அன்று வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறை 26.02.2020 அன்று திறக்கப்பட்டது.<br>1. S.Sutharson ஒப்பந்ததாரர்<br>2. S. Rambola ஒப்பந்ததாரர்<br>மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண். 284 நாள் 02.03.2020ல் தொழில்நுட்ப கமிட்டியால் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தததாரர்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளதாக விலைப்புள்ளி உறை திறக்க தேர்வு செய்யப்பட்டது.<br>1. S.Sutharson ஒப்பந்ததாரர்<br>2. S. Rambola ஒப்பந்ததாரர்<br>மேற்படி தொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்கன் விலைப்புள்ளி உறைகள் உரிய அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டு 06.03.2020ஆம் தேதியன்று உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு விலைவிகிதம் அளித்திருந்தனர்<br>1. S.Sutharson ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 0.02 % குறைவு (ரூ. 25,24,970.62)<br>2. S. Rambola ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 0.58% அதிகம் (ரூ. 25,40,098.14)<br>இதில் வரிசை எண். L1 ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.02 % குறைவாக வழங்கப்பட்டுள்ளதன் பேரில் மேற்படி L1 ஒப்பந்ததாரரிடம் 09.03.2020 அன்று விலைகுறைப்பு செய்து கொடுக்க கோரப்பட்டதன் அடிப்படையில் அந்த ஒப்பந்ததாரர் 10.03.2020ஆம் தேதியன்று விலைகுறைப்பு செய்து கடிதம் கொடுத்துள்ளதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் விகிதம் வருமாறு<br>1. S.Sutharson ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 0.52 % குறைவு (ரூ. 25,12,323.62)<br>2. S. Rambola ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 0.58% அதிகம் (ரூ. 25,40,098.14)</td><td>85)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | S.Sutharson ஒப்பந்ததாரர் விலைகுறைப்புக்குப் பின் மதிப்பீட்டை விட 0.52% (ரூ. 25,12,323.62) (GST இல்லாமல்) குறைவு, அதனடிப்படையில் L1 S.Sutharson ஒப்பந்ததாரர் குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பொது நிதியின் கீழ் பணியினை செய்வதற்கும் அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்டுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>மதிப்பீட்டை விட 0.52 % குறைவாக கொடுத்த S.Sutharson ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ2/03813/2019 | |
| | 6) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மச்சாது நகர் MCC அருகில் உள்ள சாலை பழுதடைந்துள்ளது. புதிதாக தார் சாலை அமைக்கும் பணிக்காக ரூ. 38,50,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 25.02.2020 அன்று வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறை 26.02.2020 அன்று திறக்கப்பட்டது.<br><br>1. S.Sutharson ஒப்பந்ததாரர்<br>2. S. Rambola ஒப்பந்ததாரர்<br>மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண். 283 நாள் 02.02.2020ல் தொழில்நுட்ப கமிட்டியால் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தததாரர்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளதாக விலைப்புள்ளி உறை திறக்க தேர்வு செய்யப்பட்டது.<br>1. S.Sutharson ஒப்பந்ததாரர்<br>2. S. Rambola ஒப்பந்ததாரர்<br><br>மேற்படி தொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்கன் விலைப்புள்ளி உறைகள் உரிய அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டு 06.03.2020ஆம் தேதியன்று உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு விலைவிகிதம் அளித்திருந்தனர்<br>1. S.Sutharson ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 0.04 % குறைவு (ரூ. 33,66,732.75)<br>2. S. Rambola ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 0.40% அதிகம் (ரூ. 33,81,675.00)<br><br>இதில் வரிசை எண். L1 ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.04 % குறைவாக வழங்கப்பட்டுள்ளதன் பேரில் மேற்படி L1 ஒப்பந்ததாரரிடம் 09.03.2020 அன்று விலைகுறைப்பு செய்து கொடுக்க கோரப்பட்டதன் அடிப்படையில் அந்த ஒப்பந்ததாரர் 10.03.2020ஆம் தேதியன்று விலைகுறைப்பு செய்து கடிதம் கொடுத்துள்ளதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் விகிதம் வருமாறு | 86)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 1. S.Sutharson ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 0.51 % குறைவு (ரூ. 33,50,714.75)<br>2. Rambola ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 0.40% அதிகம் (ரூ. 33,81,675.00)<br>S.Sutharson ஒப்பந்ததாரர் விலைகுறைப்புக்குப் பின் மதிப்பீட்டை விட 0.51% குறைவு (ரூ. 33,50,714.75) (GST இல்லாமல்) குறைவு, அதனடிப்படையில் L1 S.Sutharson ஒப்பந்ததாரர் குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பொது நிதியின் கீழ் பணியினை செய்வதற்கும் அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>மதிப்பீட்டை விட 0.51 % குறைவாக கொடுத்த S.Sutharson ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>E2/03636/2019 | |
| | 7) இம்மாநகராட்சி பொது சுகாதாரம் மலேரியா பரிவின் மூலம் கொசு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் முதிர் கொசுக்களை ஒழிக்க VEHICLE MOUNTED FOGGING MACHINE மூலம் இம்மாநகராட்சி அனைத்து வார்டுகளிலும் OUTDOOR மற்றும் INDOOR FOGGING வகைக்கு பயன்படுத்தப்படும் பைரித்திரம் (PYRETHRUM) என்ற மருந்தினை TNMSC அனுமதி பெற்ற M/s. Paramount Pesticides Limited நிறுவனத்தின் மூலம் 1 லிட்டர் ரூ. 1100/– (Plus GST @ 18% Rs. 198 = Rs. 1298/-) வீதம் 1000 லிட்டர் section 15 கீழ் அவசர அவசியம் கருதி வாங்கிட அனுமதியும் மற்றும் அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 13,00,000/–னை (ரூபாய் பதிமூன்று லட்சம்) இம்மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம். எ;ச2/7958/13 | 87)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 8) இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான 20 வார்டு பகுதிகளில் (1,2,3,5,17,18,34,48 முதல் 60 ) உள்ள தெருவிளக்குகளை இயக்கி பராமரிக்கும் பணியினை கடந்த 20.07.2018 முதல் ஓராண்டிற்கு ஒப்பந்தம் செய்து M/s வில்ஸ் எலக்ட்ரிக்கல்ஸ், தூத்துக்குடி நிறுவனத்தாரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது. இதற்கிடையில் நகரில் அனைத்து தெருவிளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றம் செய்து மின் ஆற்றல் சேமிப்பு உபகரணங்கள் பொருத்தும் பணிகளை அரசின் அறிவுரைகளின்படி செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்பட்டது. இதன் காரணமாக தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகளில் தொய்வு ஏற்படாமல் சீரான முறையில் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையிலும் செய்ய மேற்படி ஓராண்டு ஒப்பந்தம் 19.07.2019ல் முடிவு பெற்றாலும் தொடர்ந்து ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த விலைவிகிதத்திலேயே பராமரிப்பு செய்ய பணி நீட்டிப்பு ஆணைகள் மூன்று மாதத்திறகு ஒரு முறை என மூன்று முறை உத்தரவு வழங்கப்பட்டு மேற்படி நிறுவனத்தாரால் செய்து வரப்படுகிறது.<br>இந்நிலையில் மேற்படி நிறுவனத்தார் தமது 29.01.2020 மற்றும் 20.02.2020 ஆகிய தேதிய கடிதத்தில் ஏற்கனவே வழங்கி வரும் விலையினை 18 சதவிகிதம் உயர்த்தி வழங்க கோரினர். இதனைத் | 88) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி வழங்கப்பட்டது. |

தொடர்ந்து மாமன்றத் தீர்மான எண். 40 நாள் 21.02.2020 ஒப்புதலின் பேரில் 5 சதவிகிதம் விலை உயர்த்தி 01.02.2020 முதல் உத்தரவு வழங்கப்பட்டது. இதன் பின்னர் மேற்படி நிறுவனத்தார் தமது 24.02.2020ம் தேதிய கடிதத்தில் மேற்படி உயர்த்தி வழங்கப்பட்ட விலைவிகிதம் தமக்கு கட்டுபடியாகாது என தெரிவித்து மாநகரின் இதர 40 வார்டுகளின் தெருவிளக்கு பராமரிப்பு செய்து வரும் நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்டு வரும் ஒப்பந்த விலைவிகிதம் (அ) ஏற்கனவே தாங்கள் கோரியபடி விலையினை உயர்த்தி வழங்க கோரினார்.

இதனைத் தொடர்ந்து இவ்வலுவலக 16.04.2020ம் தேதிய கடிதத்தில் மேலும் விலை உயர்வு வழங்க இயலாது எனவும், இவ்வலுவலக 31.04.2020ம் தேதிய கடிதத்தில், வழங்கப்பட்ட விலை உயர்விலேயே தொடர்ந்து இப்பணியை செய்து கொடுக்க இசைவு வழங்கவும் கோரப்பட்டது. இதற்கு மேற்படி நிறுவனத்தார் தமது 18.04.2020ம் தேதிய கடிதத்தில் ஏற்கவே பணி நீட்டிப்பு வழங்கப்பட்ட காலத்திற்கு மட்டும் 5 சதவிகிதம் உயர்த்தி வழங்கப்பட்ட விலைவிகிதத்திலேயே பட்டியல் பெற்றுக்கொள்வதாகவும் இனி வரும் காலத்தில் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டால் இதே விலைப்பட்டியலில் பணியினை செய்ய இயலாது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தற்போது நகரில் 60 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றம் செய்து மின் ஆற்றல் சேமிப்பு உபகரணங்களை நிறுவிக்கொடுக்கும் பணியினை M/s. குமரன் இன்டஸ்ட்ரீஸ் சென்னை நிறுவனத்தாரால் கடந்த 15.03.2020 முதல் ஆரம்பித்து செய்து வரும் நிலையில், Conversion பணியினை செய்து முடிக்கும் பணிக்காலமான 10 மாதங்களிலும் பொதுமக்களுக்கு சிரமமின்றி தெருவிளக்குகளை பராமரிக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேலும் உலகை அச்சுறுத்தும் கொரோனா (COVID-19) உயிர்கொல்லி தொற்று நோயின் காரணமாக அரசு கடந்த 26.3.2020 முதல் முழு ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து தொடர்ந்து அமலில் இருந்து வருகிறது.

இந்நிலையில் மேற்படி பகுதி தெருவிளக்கு பணியினை தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக தற்போது உள்ள தெருவிளக்குகளில் பழுது ஏற்பட்டால் திட்டப்பணியில் வாங்கப்பட்டுள்ள LED விளக்கு பொருத்திகளை உடனுக்குடன் மாற்றம் செய்து கொள்ளலாம். மேலும் இது போன்று தெருவிளக்குகளில் ஏற்படும் அத்தியாவசிய எதிர்பாரா பழுதுகள் மற்றும் ON/OFF செய்யும் பணிகளையும் தொடர்ந்து கவனித்திட தற்காலிக அடிப்படையில் 8 எண்ணிக்கை மின் உதவியாளர்கள் (Electrical Helper) மற்றும் 4 எண்ணிக்கை மின் கம்பியாளர்கள் ஆக மொத்தம் 12 பணியாளர்களை PWD SOR 2020-21ம் ஆண்டு விலைவிகிதங்களின் அடிப்படையில் நகர் வாழ்வாதார மையம் (City Livehood Centre) மூலம் நியமனம் செய்து மேற்கொல்லப்பட்ட மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 20 வார்டு பகுதி தெருவிளக்குகளையும் 6 மாத காலம் அல்லது திட்டப் பணி முடித்து பராமரிப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்யும் வரை பராமரிப்பு செய்திடவும், இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 12.35 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2) இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 12.35 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதி 2020–21ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் வழிவகை செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண் 825/2018/இ3 | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.20.05.2020

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி